பாடம் 2

# ஜீவத் தண்ணீர்?

*பள்ளியில் மேரிக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. சீனாவிலிருந்து பெய்-லிங்க் என்னும் பெயருடைய ஒரு பிள்ளை புதிதாகப் பள்ளியில் சேர்ந்திருந்தாள். மேரியின் அருகே ஆசிரியை அவளுக்கு இடம் கொடுத்திருந் தார்கள். அவளுடன் அன்புடன் பழகி அவளைத் தன் சிநேகிதியாக வைத்துக்கொள்ள இயேசு தனக்கு உதவவேண்டுமென்று ஜெபித்தாள். ஏனெனில் பிறரிடம் நட்புவைப்பது எப்படி என இயேசுவுக்குத்தான் தெரியும்.*

ஒருநாள் இயேசுவும் அவரது சீடர்களும் கலிலேயாவுக்கு சமாரியா நாட்டின் வழியே சென்று கொண்டிருந்தார்கள். யூதர்க ளும் சமாரியர்களும் சண்டைக் காரர்கள்; ஒருவரையொரு வருக்குப் பிடிக்காது. சமாரியா விலுள்ள சீகார் என்னும் ஊருக்கு வெளியே உள்ள ஒரு கிணற்றருகே இயேசு உட்கார்ந்தார். அவர் களைப்பாகவும் பசியாகவுமிருந்தார். அவ ருக்கு அதிக தாகமாயிருந்தது. அவர் தனியாக இருந்தார். அவருடைய சீடர்கள் உணவு வாங்கி வருவதற்காக ஊருக்குள் சென்றிருந்தார்கள்.

அப்போது உச்சி வெயில் அடித்துக்கொண்டிருந்தது. வீட்டிற்குள் இருந்து எல்லாரும் இளைப்பாறிக் கொண்டிருந் தார்கள்; ஆனால், ஒரே ஒரு சமாரியப்பெண் மட்டும் அந்தக் கடும் வெயிலில் கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்தாள்.

“எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தருவாயா?” என்று இயேசு அவளிடம் கேட்டார்.

யூதனாகிய இயேசு தன்னி டம் பேசியது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் சமாரியர்களுடன் யூதர்கள் பேசமாட்டார்களே!

“நீர் யூதனல்லவா? என்னிடம் ஏன் தண்ணீர் கேட்கிறீர்?” என்று



## மனன வசனம்

**நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது.**

**யோவான் 4:14.**

வியப்பாய்க் கேட்டாள்.

அதற்கு இயேசு, ''நீ என்னிடம் தண்ணீர் கேட்டிருந்தால், நான் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பேன்; அதைக் குடித்தால் உனக்கு ஒருபோதும் தாகமே ஏற்படாது'' என்றார்.

ஆவலுடன் இயேசு கூறியதைக் கேட்ட அவள் தான் ஒரு யூதனிடம் பேசிக்கொண்டிருப்பதையும் மறந்தாள். சுத்தமான, நல்ல, தாகமே இனி ஏற்படுத்தாத அந்த ஜீவத்தண்ணீரைப் பெற ஆசைப்பட்டாள்.

இயேசுவிடம் அந்த ஜீவத்தண்ணீரைத் தனக்குத் தரும்படி கேட்டுக்கொண்டாள்.

அவளிடம் இயேசு ஜீவத்தண்ணீரைப்பற்றிவிளக்கம் சொன்னார். இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து,



இயேசுவைப் பின்பற்றினால் நித்திய வாழ்வு கிடைக்கும் என்றார். அதையே ஜீவத்தண்ணீர் என்று குறிப்பிட்டதாகக் கூறினார்.

அச்சமாரியப்பெண் இயேசு கூறியதை விசுவாசித்தாள். தன்னிடம் இயேசு வாக்களித்த ஜீவத்தண்ணீரை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள விரும்பினாள்; எனவே, தனது குடத்தை அங்கேயே வைத்துவிட்டு ஊருக்குள் ஓடினாள். இயேசு தமக்குச் சொன்ன யாவையும் கூறினாள்.

அவள் சொன்னதைக் கேட்ட மக்கள் யாவரும் வந்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டார்கள். அவர்கள் விருப்பப்படியே இயேசு அந்த ஊரில் மேலும் இரண்டு நாட்கள் தங்கினார்.

இயேசு அவர்களிடம் தேவனுடைய அன்பைப் பற்றியும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும் பேசினார். சமாரியர்கள் வேறு ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள் வித்தியாசமானது

## செய்தி

**தேவனைப் பற்றி நான் பிறருக்குச் சொல்லும்போது தேவனைச் சேவிக்கிறேன்.**

என்பதற்காகவெல்லாம் இயேசு அவர்களை ஒதுக்கவில்லை. யூதர்களை சமாரியர்கள் வெறுக்கிறார்கள் என்பதற்காகவும் இயேசு வெறுத்துவிடவில்லை.

இயேசு உலகிலுள்ள அனைவரையும் நேசிக்கிறார். ஏனென்றால் எல்லாருமே அவருடைய சொந்தப் பிள்ளைகள்.

என் செல்லமே, உலகிலுள்ள அனைவரும் இயேசுவினுடைய நண்புர்கள். கறுப்பாகவோ சிவப்பாகவோ வெள்ளையாகவோ மஞ்சளாகவோ எந்த நிறத்தை உடையவர்களானாலும் எல்லாரையும் இயேசு நேசிக்கிறார்; ஏனெனில் யாவரும் அவருக்கு நண்பர்களாம்.

**செய்முறை: கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளிலுள்ள இரண்டாம் எழுத்துகளை அடித்தால் முக்கியமான செய்தி ஒன்று கிடைக்கும்.**

## புதிர் 2



**உகலசகிடலுதள்பள** ____________________

**எரல்யலமா** ____________________

**மகக்சகடதைளபயுரம்** ____________________

**இனநேயஸசு** ____________________

**வேநலசிமக்கிறறராரே்** ____________________